முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No. 133/2023

தேதி : 20-11-2025

(வா.சா.2) – திரு.கண்ணுதுரை

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வாதி அழைத்தன்பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். பிரதிவாதியை தெரியுமா என்றால் தெரியும். புரோநோட் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் மருந்து கடையில் வைத்து எழுதப்பட்டது. எப்போது எழுதப்பட்டது என்றால் 2020. தேதி, மாதம் என்ன என்றால் தேதி ஞாபகமில்லை, 5ம் மாதம். வாதி என்ன செய்கிறார் என்றால் மருந்து கடை வைத்துள்ளார். வாதி அதை தவிர நிலத்தரகர் வேலையும் செய்கிறார் என்றால் எனக்கு தெரிய இல்லை. வாதி நிலத்தரகர் வேலை செய்கிறார் என்றும், அதனடிப்படையில் பிரதிவாதியின் நிலத்தை விற்பதற்காக வாதியிடம் சொல்லியிருந்தார் என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. பணம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றும், எப்படி கொடுத்தார் என்றால் ரொக்கமாக கொடுத்தார். அப்போது யாரெல்லாம் இருந்தார்கள் என்றால் நான், பாலசுப்ரமணி, சபாபதி, சக்திவேல் மற்றும் வாதி இருந்தோம். நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் காலம் கொரானா என்றும், எனவே கடைகள் அடைக்கப்பட்டியிருந்ததால், மருந்து கடையில் வைத்து பணம் கொடுத்ததாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இருந்த நில தொடர்பான பிரச்சனையில் வாதி தாவா புரோநோட்டை உற்பத்தி செய்துள்ளார் என்றும், அதிலுள்ள கையெழுத்து பிரதிவாதியுடையதல்ல என்றால் சரியல்ல. எப்படியாவது பிரதிவாதியிடம் பணத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் புரோநோட் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றும், வாதி எனக்கு தெரிந்தவர் என்பதால் நானும் அவருக்கு உறுதுணையாக இருந்தேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் பிரதிவாதி வாதியிடம் எந்த தொகையும் பெறவில்லை என்றும், மேலும் புரோநோட் எழுதித்தரவில்லை என்றால் சரியல்ல.

K RENUGADEVI
Digitally signed by K RENUGADEVI
Date: 2025.11.20 14:04:13 +0530

முதன்மை சார்பு நீதிபதி,

பழனி.